# அறிஞர் அண்ணாவின் எளிமை!

**நேற்றைய தொடர்ச்சி...**



திருச்சியிலே மாநாடு, அறிஞர் அண்ணா வந்து மாநாடு நடத்தி முடித்து விட்டார் ஆனால் , மாநாட்டிற்கான செலவுகளை சரி செய்கின்ற அளவுக்கு வசூல் ஆகவில்லை. மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்று விட்டது. மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் எல்லாம் பஞ்சைகள், பராரிகள், ஏழைகள். அண்ணாவை தொடர்ந்தவர்கள் அப்படிப் பட்டவர்கள் தானே ! சீமான்கள் அவருக்கு பின்னால் இல்லையே!செல்வந்தர்கள் கிடையாதே! மிட்டா மிராசுகளை தான் எதிர்த்து கொண்டு இருந்தோமே, ஆக வந்தவர்கள்

எல்லாம் கூலித் தொழிலாளிகள், பாட்டாளி வர்க்கம், விவசாய பெருங்குடி மக்கள். வந்த கூட்டம் பெரிது, அது உழைக்கின்ற இனம்! அது வெற்றிகரமான மாநாடு!உணர்ச்சி பெருக்கு! ஆனால் தேவையான அளவிற்கு நிதி கிடைக்காமல் , அண்ணா அதற்குப் பின்னால் மூன்று நாட்கள் ஊருக்கு செல்ல முடியாமல் தங்கி, எங்கெங்கோ கடன் வாங்கி, மாநாட்டிற்கான செலவுகளை எல்லாம் சரி செய்து கொடுத்து விட்டு, பின்னர் இங்கிருந்தவர்களிடம் பெட்ரோலுக்கு பணம் பெற்றுக் கொண்டு சென்னைக்கு சென்றதாக சொல்வார்கள்.

இப்படி ஒரு தலைவன் வளருகின்ற காலத்தில் ஏழ்மையை சந்தித்தார். வறுமையை சந்தித்தார் .வாழ்க்கையிலே பொருளாதாரம் என்பதற்கு முக்கியத்துவம் இரண்டாம் பட்சம் என்று என்று செய்தாலும் கூட, ஏழையாக இருக்கிறவர் உயர வேண்டும், மாடி வீட்டிலே இருக்கிறவரை குடிசை வீட்டிற்கு கொண்டு வருவது அல்ல சமத்துவம்; குடிசையிலே இருக்கிறவர்களை கோபுரத்திலே கொண்டு போய் அமர்த்துவது தான் உண்மையான சமத்துவம் என்று செயல்பட ஆரம்பித்த அண்ணா அவருடைய பேச்சில் எழுத்தில் கனிவு இருந்தது. வேகம் இருந்தது. துணிவு இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக யாருக்கு என்ன தேவை என்பதை எதிர்காலத்திலே தொலைநோக்கோடு பார்க்கின்ற பார்வை அண்ணாவுக்கு இருந்தது.

**அதனால்தான் இத்தனை ஆண்டுகள் கடந்தும் இன்னும் அண்ணாவை நினைக்கிறோம் . அண்ணா மறைந்து 55 ஆண்டுகள்! யாராவது நம்ப முடியுமா? நெருங்கியவர்கள் மறைந்தால் கூட பத்தாண்டுகளில் நினைவு மங்கிப் போகின்றது . அவர் எந்த நாள் மறைந்தார் என்பது தெரியாமலே போகின்றது நினைவு கூட்டி பார்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் பிப்ரவரி மாதம் மூன்றாம் தேதி என்று சொன்னால் நம்மையும் அறியாமல் உள்ளம் கலங்குகிறதே! செப்டம்பர் 15 என்றால் உள்ளம் குதூகலம் அடைகிறதே! செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாள் பிப்ரவரி 3 அண்ணா மறைந்த நாள். அண்ணா மறைந்தது 1969 இப்போது 55 ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அண்ணாவைப் பற்றி பேசிக் கொண்டே இருக்கிறோம் . ஓராண்டும் பேசுகிறோம் என்பதை விட நாளெல்லாம் பேசுகிறோம், பொழுதெல்லாம் பேசுகிறோம், செல்லுகிற இடம் எல்லாம் பேசுகிறோம் என்றால் அவர் எல்லாவற்றையும் கடந்தவர் . அவரால் தமிழ் வாழ்வு பெற்றது.**

தமிழ் என்கின்ற இந்த மொழி உலகின் தொன்மையான மொழி நம்முடைய தாய்மொழி. தொன்மையான மொழிகளிலே மூத்த தலைமையான மொழி தமிழ் மொழி. அந்த மொழிக்கு எத்தனையோ இடையூறுகள் வந்திருக்கின்றன. எத்தனையோ ஊறுகள் நேர்ந்திருக்கின்றன. பண்பாட்டுப் படையெடுப்பு, மொழிப் படையெடுப்பு , இனப் படையெடுப்பு, நிலப் படையெடுப்பு என்று எத்தனையோ வந்த போது, தமிழ் தலையெடுத்தது, தத்தளித்தது, பின்னர் வாழ்ந்து கொண்டே இருந்தது பல்வேறு காலகட்டங்களில். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னால் தமிழில் வேறு மொழி கலப்படம் என்று ஆரம்பித்து மொழியின் தன்மை சிதைய ஆரம்பித்த போது தான் அண்ணா என்ற அரசியல் தலைவன் கிளம்பினார். அவர் கிளம்பியதற்கு பின்னால் தான் தனித்தமிழ் இயக்கம் உருவானது. தமிழைத் தூய்மைப்படுத்து கின்ற, தமிழைப் புதுப்பிக்கின்ற தமிழை அதிலே இருந்து மீட்டெடுக்கின்ற மிகப்பெரிய கடமையை அண்ணா செய்தார். அதன் விளைவாகத் தான் இன்றைக்கு நல்ல தமிழ், நாட்டிலே எல்லோருடைய நாவிலேயும் புழங்குகிறது என்று சொன்னால் அது அண்ணாவால் தான் ஆரம்பித்தது .

கூட்டத்து தலைவர் அவர்களே என்று ஆரம்பித்து சட்டமன்றம் இன்று சட்டப்பேரவை என்பதை பெயர் மாற்றி, அங்கத்தினர் என்பதை உறுப்பினர் என்று மாற்றி, அபேட்சகர் என்பதை வேட்பாளர் என்று மாற்றியதோடு மட்டுமின்றி ‘வாய்மையே வெல்லும்’ ஒரு காலத்தில் தமிழ்நாட்டினுடைய இலச்சினையில் சத்தியமேவ ஜெயதே என்று இருந்ததை எடுத்து வாய்மையே வெல்லும் என்று ஆரம்பித்தார்கள்.

ஆக அண்ணா பேச ஆரம்பித்த உடன் சாதாரண பாமரனுக்கு கூட நல்ல தமிழ் பேச வேண்டும் என்ற ஆர்வம் வந்தது .அண்ணா நாடகம் எழுதினார், நாடகங்களில் நடித்தார், திரைப்படங்களுக்கு கதை எழுதினார் , திரைப்படங்களுக்கு வசனம் எழுதினார் . அதைவிட மிகப்பெரிய சிறப்பு சிறைச்சாலை யிலே அண்ணா இருக்கிற. போதெல்லாம் யாராவது அவரை காண வந்தால், அவர் அவர்களிடம் கேட்பது“ எனக்கு ஏதாவது புத்தகம் வாங்கித் தாருங்கள் ,எழுதுவதற்கு வெற்றுத் தாள் கொண்டு வந்து தாருங்கள், இந்த இரண்டும் தான் கேட்பாரே தவிர எனக்கு உண்பதற்கு அதை வாங்கி வா என் உடுப்பிற்கு வேறு வாங்கி வா என்றெல்லாம் சொல்வதே கிடையாது. கேட்டதெல்லாம் புத்தகங்களும் அதேபோல வெற்றுத் தாள்களும். அண்ணா நிறைய எழுதுவார், சில நேரங்களிலே படங்கள் வரைவார் , சில நேரங்களில் நகைச்சுவைத் துணுக்குகளும் வரைவார் . இவ்வளவு உயர்ந்த தலைவனுக்கு, இவ்வளவு கற்ற தலைவனுக்கு ஒரு துணுக்கு சொல்வார்கள். ஒரு பலகாரக் கடை அதிலே சாப்பிட வருகிறவர் அந்த பணியாளரிடம் கேட்பார் , “என்னய்யா வடை சுவை குறைவாக இருக்கிறது அளவும் சிறியதாக இருக்கிறதே” என்று சொல்லுகிற போது சுவை குறைவாக இருந்து அளவு பெரியதாக இருந்தால் சாப்பிடுவதற்கு சிரமம் என்பதனால் என்று பதில் சொல்வார். நகைச்சுவை உணர்வும் அண்ணாவுக்கு இருந்தது. மேடைகளில் பேசுகிறபோது அப்படித்தான்,

ரொம்ப போகிற போக்கிலே நகைச்சுவையை தெளித்து விட்டு செல்வார் . தமிழ் நாடு பெயர் மாற்றம் என்று அண்ணா நாடாளுமன்றத்தில் பேசுகிறபோது , இன்றைக்கு தமிழ்நாடு என்று பெருமையோடு சொல்லுகிறோம் ஆனால் ஒரு காலத்திலே இது சென்னை மாகாணம். பல பேர் வாதிட்டார்கள்.

சென்னை என்பதும் மெட்ராஸ் என்பதும் அ**றிமுகமான சொற்றொடர் . உலகம் முழுவதும் தெரியும். அதை ஏன் மாற்ற வேண்டும் என்று கேட்டபோது அண்ணா, மறுத்து பேசினார். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்தின் பெயர் அதன் தலைநகரின் பெயரால் இருக்கிறது என்று சொல்லுங்கள் என்று கேட்டார் . இந்த மாநிலத்திற்கு தமிழ் நாடு என்று பெயர் சூட்டுங்கள் என்று சொன்னார். அதை எதிர்த்து ஒருவர் கேட்கிறார் “நீங்கள் தமிழ்நாடு என்று சொல்வதால் என்ன ஆனந்தம் அடையப் போகிறீர்கள்?” என்று கேட்டபோது அண்ணா சொன்ன பதில் நாடாளுமன்றத்திலே சொன்னது, அவருக்கு நேரடியாக சொல்லாமல் பிரதமராக இருந்த பண்டித நேரு அவர்களைப் பார்த்துச் சொன்னார். தமிழன் வாழ்ந்த கதை**

**உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஆரிய திராவிடப் போரை எழுதியவர் . ராமாயணத்தினுடைய முழுமையான பின் கதையை உங்கள் புத்தகங்களில் எழுதியவர் . தமிழனுடைய வாழ்க்கை உங்களுக்கு தெரியும். வாழ்ந்தது தெரியும் ஆனால் வீழ்ந்ததும் தெரியும் , வீழ்ந்ததற்கான காரணம் தெரியாது அல்லவா இப்போது தெரிந்து கொள்ளுங்கள். இந்த மன்றத்தில் நீ தமிழ்நாடு என்று பெயர் மாற்றுவதால் என்ன லாபம் அடையப் போகிறாய் ? என்று கேட்கிற குரல் பஞ்சாபியின் குரல் அல்ல! காஷ்மீரியின் குரல் அல்ல! இந்த நாட்டிலே இருக்கிற உத்தர பிரதேசத்தில் இருந்து வருகிறவர் அல்ல ! என் தாய் தமிழ்நாட்டில் பிறந்தவர் தான்**

**திருச்சி சிவா**
மாநிலங்களவை
கழகக் குழுத் தலைவர்



**கேட்கிறார் . ஆகவே தமிழனின் தாழ்விற்கு தமிழன் தான்**

**காரணமாக இருந்திருக்கிறான்” என்று சொல்லிவிட்டு அண்ணா சொல்லுகிறார், “நீங்கள் எப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட அவையை லோக்சபா என்று அழைக்கிறீர்கள். அதில் உங்களுக்கு என்ன ஆனந்தம்? மாநிலங்களுடைய உறுப்பினர்கள் இருக்கின்ற அவையை நீங்கள் ராஜ்யசபா என்று அழைக்கிறீர்களே அதில் உங்களுக்கு என்ன உற்சாகம் ? இந்த நாட்டிலே இருக்கிற மிகப்பெரிய பதவி என்பது குடியரசுத் தலைவர் பதவி . அதை ராஷ்டிரபதி என்று சொல்லுகிறீர்களே அதிலே நீங்கள் என்ன ஆனந்தம் அடைகிறீர்களோ அதே ஆனந்தத்தை தான் நான் தமிழ்நாடு பெறுகிறேன்” என்று அவர் வாதம் வைத்த போது யாராலும் அவரை எதிர்த்து பேசவே முடியவில்லை.**

இப்படி அண்ணா அவர்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும், திராவிட நாடு என்று சொல்லுகிற போது திராவிட இனத்தைச் சார்ந்தவன் என்று சொல்கிறார் . திராவிட இனத்தினுடைய பெருமையை சொல்கிறார். I have something different and distinct to offer to the nation at large என்று ஆரம்பிக்கிறார் அண்ணா . ‘என்னுடைய இனம் ஒரு தனிப்பெரும் இனம் அதனால் நான் மற்றவர்களை வெறுக்கிறேன் என்பதல்ல’ என்று சொல்லிவிட்டு , திராவிட நாடு கோரிக்கைகளை வலியுறுத்தி அண்ணா நாடாளுமன்றத்திலே பேசிய நாட்கள் உண்டு. பின்னர் சட்டம் வருகிறது பிரிவினை தடைச் சட்டம். நாட்டில் பிரிவினை கேட்கின்ற இயக்கங்கள் தடை செய்யப்படும் என்று வருகின்றபோது அண்ணா அவர்கள் திராவிட நாடு கோரிக்கையை கைவிடுகிறார்கள். கைவிட்டதாகவே அறிவிக்கிறார். அப்போது கூட இருந்தவர்களே பல பேர் எதிர்க்கிறார்கள். அண்ணா அதற்காக விளக்கங்கள் சொல்லுகிறார், கடிதம் எழுதுகிறார், ஒரு நூலே எழுதி இருக்கிறார். அண்ணா கைப்பட எழுதி அதை ரொம்ப நாள் வைத்திருந்து பின்னர் கலைஞர் அதை பதிப்பித்தார். அது அண்ணாவின் கையெழுத்திலேயே இருக்கிறது. எண்ணித் துணிக கருமம் என்பது அந்த நூலின் பெயர் . திராவிட நாடு கோரிக்கையை ஏன் கைவிட்டோம் என்பதற்கு சில பேர் மனதிலே எழக்கூடிய ஐயங்களை அண்ணாவே எழுப்பி அதற்கு விளக்கங்கள் பதில் சொல்லுகிற முறையில் அந்த நீண்ட வடிவத்தில் இருக்கும் அந்த அளவிற்கு . நண்பர்களுக்கு அண்ணா எழுதினார்.

சட்டம் கைநீட்டுகிறது , நான் கழகத்தைக் காக்க வேண்டும். ஒரு கொள்கையை விட்டுக் கொடுத்து நான் இயக்கத்தை காப்பாற்றுகிறேன்” என்று தான் அண்ணா சொன்னார். அதை கைவிடுற போது விளக்கம் சொல்லுகிறார். “வீடு இருந்தால் தான் தம்பி ஓடு மாற்ற முடியும். பல கொள்கைகளை வைத்திருக்கிறோம். ஒரு கொள்கைக்காக ஒட்டுமொத்தமாக எல்லாவற்றையும் இழக்க முடியாது. ஒன்றை கொடுத்து மற்றதை காக்கிறோம்” என்று சொல்லி அந்த நேரத்தில் “நாடைக் காப்பது தான் மிகப்பெரிய கடமை. நாட்டைப் பாது காப்பது தான் நமக்கு முக்கியம். ஒருமைப் பாட்டில் நான் யாருக்கும் சளைத்தவன் அல்ல” என்று சொல்லி , அப்போதே அண்ணா நிதி திரட்டி கொடுத்தார்.

கைத்தறி தொழிலாளர்களை பாதுகாப்பதற்காக கைத்தறி துணிகளை தோளில் போட்டுக் கொண்டு தெருத்தெருவாக சுற்றி வந்தவர் அண்ணா. மேடையில் அணிவிக்கப்படுகின்ற மாலைகள் என்பவை மலர்களாக இருந்து காலையில் மிதிபட்டு போவதற்கு பதிலாக கைத்தறி ஆடைகளாக வாங்கி அணிவித்தால் அதை நெய்தவனும் பயன்பெறுவான் வாங்குகிறவனும் நாளை பயன்பெறுவார்கள் என்ற கருத்தை தன் தொண்டர்களுக்கு வலியுறுத்தி அதை பின்பற்ற செய்ததோடு மட்டுமல்ல, அது விற்க வேண்டும் என்பதற்காக விற்க முடியாத வறுமை நிலையிலே இருந்த அந்த கைத்தறி நெசவாளர்களுக்காக அந்த துணிகளை எல்லாம் தோளில் போட்டுக் கொண்டு தன்னுடைய தம்பிமார்களையும் ஒவ்வொரு பக்கமாக அனுப்பி தெருவிலே துணிவிற்ற தலைவன் அண்ணா.

அண்ணாவைப் பற்றி பேசுகிறபோது நெஞ்சு நெகிழ்கிறது , கண்ணீர் கசிகிறது . ஒரு தலைவன் ஏழைகளுக்காக, உழைப்பவர்களுக்காக, பாடுபடுகிறவர்களுக்காக அவர்களுக்காக அவர்கள் நிலையிலேயே இறங்கி அவர்களைப் போலவே வாழ்ந்து, ஒரே வேட்டியை நான்கு நாட்கள் கட்டுவது , திருப்பி கட்டுவது அதைப்பற்றி கவலைப் படுவதில்லை.

குழந்தைகளை பார்த்தால் அன்போடு இருப்பது இந்த பக்கம் ஒரு அண்ணா. இன்னொரு பக்கம் தமிழைக் காக்க முன் வருகிற போது அவரை போல ஒரு போர் வீரன் யாரும் இல்லை என்ற வேகம் . சீர் திருத்தம் என்று வருகிற போது அவரைப் போல வாதிடுகிறவர்கள் யாருமே இல்லை. எந்த காலத்திலும் எது தேவையில்லை என்று வாதிடுகிறார்களோ அதற்குத் தேவையான சான்றுகளுக்கு மூலத்தை முழுமையாக படித்தவர் அண்ணா.

**கன்னிமாரா நூலகத்தின் ஒட்டுமொத்த நூல்களை எல்லாம் படித்தவர் அண்ணா. ஒரு முறை பண்டித நேரு அவர்கள் சென்னைக்கு வருகிறார் . வருகிற போது பொருளாதாரம் தொடர்பாக ஒரு புத்தகத்தை தேடுகிறார். அதை தேடுகிற போது அதை அவர்கள் தேடி செல்லுகிற இடம் ஹிக்கின்பாதம்ஸ். அங்கே அவர்கள் சொல்லுகிறார்கள் “ஒரே ஒரு நூல் தான் இருந்தது அதை ஒருவர் வாங்கிச் சென்று விட்டார்.” யார் என்று கேட்கிறபோது அறிஞர் அண்ணா என்று சொல்லுகிறார்கள். அப்போது அண்ணாவிற்கும் பண்டித நேருவுக்கும் அதிகமாக தொடர்பு கிடையாது. உடனே தன்னிடம் இருந்தவர்களை அனுப்பி- அவர் பிரதமர் - இவரிடமிருந்த நூலை வாங்கி வரச் சொல்கிறார். வாங்கிவிட்டு அன்று இரவே அதனைத் திருப்பிக் கொடுக்கிறார். ‘படித்து விட்டீர்களா’ என்று கேட்கிற போது “நான் முழுமையாக படிக்க அவசியம் இல்லை .இதை படித்துவிட்டு அண்ணா எங்கே எல்லாம் பக்கத்திலே கோடு போட்டு வைத்திருந்தாரோ அதை மட்டும் படித்தேன். எனக்கு தேவை யானது கிடைத்துவிட்டது” என்று நேரு அவர்கள் சொன்னதாக சொல்லுவார்கள் .**

ஆக நேருபெருமான் என்ற மிகப்பெரிய தலைவன் தேடிய புத்தகத்தை அதற்கு முன்பாகவே வாங்கி அதைப் படித்து தேவையானதை குறிப்பு எடுக்கின்ற அளவிற்கு ஆற்றல்மிக்க தலைவனாக இருந்தார். அறிவு நிறைந்த தலைவனாக, அன்பு நிறைந்த தலைவனாக இந்த தமிழ் மொழியை காக்கின்ற அளவிற்கு ஒரு பெரிய தளகர்த்தராக லட்சக் கணக்கில் தம்பிமார்களை உருவாக்கி வைத்த தலைவன் , அவர் கடைசியாக கடற்கரையிலே போய் தஞ்சமடையப் போகிறபோது கண்ணீர் கடலில் இந்த நாடு தத்தளித்தது.

உலகில் இவருக்கு பின்னால் அழுது கொண்டு போனவர்கள் வேறு எந்தத் தலைவனுக்கும் இல்லை என்கிற அளவிற்கு, உலகத்தில் உள்ள பல நாடுகளில் இந்தியா ஒரு நாடு . அந்த நாட்டிலே ஒரு மாநிலம் தமிழகம். அந்த தமிழகத்திலே ஒரு கட்சியின் தலைவர் மாநிலத்தின் முதலமைச்சர். ஆனால் அவர் கடைசியாக ஊர்வலம் போகிறபோது கண்ணீர் வெள்ளம் அவரைப்போல வேறு எவருக்கும் வந்ததில்லை என்று கின்னஸ் புத்தகம் பதிவு செய்திருக்கிற அளவிற்கு வாழ்ந்த தலைவன் அண்ணா .மறக்க முடியாது அந்த மாமனிதனை. அவருடைய வாழ்க்கை என்பது எல்லோரும் அறிய வேண்டியது மட்டுமல்ல; பின்பற்ற வேண்டியது. அண்ணா என்கிற தலைவன் அழியாத ஒரு மனிதன் எல்லா காலத்திலும் இருப்பார் தமிழ் இருக்கிற வரை அண்ணா இருப்பார். தமிழ் உணர்வு இருக்கிற வரை அண்ணா இருப்பார் .

தமிழ்நாடு என்று இன்று தழைத் தோங்கி இருப்பதற்கு காரணம் அண்ணா என்ற எண்ணம் வரும் . அண்ணாவின் பிறந்தநாள் இது

பேரறிஞர் அண்ணாவை வாழ்த்துவோம் என்பதை விட அவரை வணங்குவோம் அவரை பின்பற்றுவோம் . அவருடைய கொள்கைகளை, உணர்வுகளை, அவர் தந்தவற்றையெல்லாம் பாதுகாப்போம் என்ற சூளுரை தான் இன்றைய தலைமுறையை நாளைக்கு நிமிர்ந்த ஒரு தலைமுறையாக மாற்றும் என்ற உணர்வோடு அண்ணா வாழ்க அண்ணா வாழ்க என்று காலமெல்லாம் சொல்லிக் கொண்டிருப்போம்.



நெல்லை மாவட்டம் பாளை சிறைச்சாலை எதிர்புறம் உள்ள பிளாரன்ஸ் சுவேன்சன் மைதானத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சியினை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ஆகியோர் துவக்கி வைத்து 64 பயனாளிகளுக்கு ரூபாய் 1.51 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.உடன் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், மேயர் ராமகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் அப்துல்வகாப், ரூபி மனோகரன் உள்பட பலர் உள்ளனர்.




சிவகங்கை மாவட்டம் செயற்குழுக் கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளருமான கே.ஆர். பெரிய கருப்பன் சிறப்புரை ஆற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட அவைத்தலைவர் அ.கணேசன், காரைக்குடி மாநகர செயலாளர் என்.குணசேகரன் மற்றும் நிர்வாகிகள் உள்ளார்கள்.